

## பெண் குழந்தைகள் பாதுகாப்பு முதிர்வு தொகை: சமூகநலத் துறையை அணுகலாம்

### அமைச்சர் கீதாஜீவன்

தூத்துக்குடி, மே 9: தமிழகத்தில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட முதிர்வு தொகை பெற சமூகநலத் துறையை அணுகலாம் என்று சமூக நலன்– மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ. கீதாஜீவன் தெரிவித்தார்.

தூத்துக்குடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் சார்பில், தூத்துக்குடி எம்எல்ஏ அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகைக்கான ஆணை வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் கி.செந்தில்ராஜ் தலைமை வகித்தார்.

அமைச்சர் கீதாஜீவன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, 50 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ. 1,500 பெறுவதற்கான ஆணைகளை வழங்கினார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 2 பெண் குழந்தைகள் உள்ளோர் அவர்களது 18 வயது பூர்த்தி அடைந்து, முதிர்வு தொகை பெறக்கூடியவர்கள், தங்களிடமுள்ள பாண்டு பேப்பரின் நகலை சமூகநலத் துறை அலுவலகத்தில் நேரில் சென்று கொடுத்து, முதிர்வுத் தொகையைப் பெறலாம். இந்தத் திட்டத்தில் இதுவரை ரூ. 231 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

மாநகராட்சி தெற்கு மண்டலத் தலைவர் பாலகுருசாமி, வட்டாட்சியர்கள் பிரபாகரன், ராஜலெட்சுமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**திட்டத்தின் பெயர்**

சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்.

**ஒரு பெண் குழந்தைக்கான திட்டம்-1.**

**இரண்டு பெண் குழந்தைகளுக்கான திட்டம்-2.**

**நோக்கம்**

குடும்பக்கட்டுப்பாட்டை ஊக்குவித்தல், பெண் சிசு வதையை ஒழித்தல், ஏழை குடும்பங்களில் பெண் குழந்தைகளுக்கு நல்வாழ்வு அளித்தல், பெண் குழந்தையின் மதிப்பை உயர்த்துதல்.

**உதவித்தொகை விவரம்**

**திட்டம்-1**

குடும்பத்தில் ஒரேயொரு பெண் குழந்தை எனில், ரூ.50 ஆயிரத்திற்கான காலவரை வைப்புத்தொகை குழந்தையின் பெயரில் வழங்கப்படும்.

**திட்டம்-2**

குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் எனில், ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிலை வைப்புத்தொகை வழங்கப்படும். (தமிழக அரசு அண்மையில் உயர்த்தி அறிவிக்கப்பட்ட தொகை). மேலும், இத்திட்டத்தில் சேரும் குழந்தைக்கு ஆண்டு தோறும் கிடைக்கும் வட்டியை, வைப்புத்தொகை வழங்கப்பட்ட ஆறாம் ஆண்டில் இருந்து இருபதாம் ஆண்டு வரை கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும்.

**தகுதிகள் மற்றும் நிபந்தனைகள்**

1. ஒரு குடும்பத்தில் ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருக்க வேண்டும்.
2. ஆண் குழந்தை இருத்தல் கூடாது. பின்னாளில் ஆண் குழந்தையை தத்து எடுக்கவும் கூடாது.
3. பெற்றோர்களில் ஒருவர் 40 வயதிற்குள் கருத்தடை அறுவை சிகிச்சை செய்திருக்க வேண்டும்.
4. ஒரு பெண் குழந்தை எனில் (திட்டம்-1) ஆண்டு வருமானம் ரூ.50 ஆயிரத்திற்கு குறைவாகவும்.
5. இரண்டு பெண் குழந்தைகள் எனில் (திட்டம்-2) ஆண்டு வருமானம் ரூ.24 ஆயிரத்திற்கு குறைவாகவும் இருத்தல் வேண்டும்.
6. பயனடையும் குழந்தை 3 வயது நிறைவடைவதற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

**இணைக்க வேண்டிய சான்றுகள்**

1. குழந்தைகளின் பிறப்பு சான்றிதழ்கள்.
2. வருமானச்சான்று.
3. இருப்பிடச்சான்று.
4. கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டதற்கான சான்று.
5. சாதிச்சான்று.
6. பெற்றோரின் வயதுச்சான்று.

EVA STALIN IAS ACADEMY

7. ஆண் வாரிசு இல்லை என்பதற்கான சான்று.
8. குடும்ப அட்டையின் நகல்.
9. குடும்ப புகைப்படம்.

**வழங்கப்படுவதற்கான கால அளவு:-**

நிலை வைப்புத் தொகையின் 20-ம் ஆண்டின் முடிவில் மீதமுள்ள வட்டியுடன் சேர்த்து முதிர்வுத்தொகை வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர்**

- மாவட்ட சமூகநல அலுவலர்
- மாவட்ட திட்ட அலுவலர்கள் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்).
- குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள், விரிவாக்க அலுவலர்கள் (சமூக நலம்), ஊர்நல அலுவலர்கள். இத்திட்டத்திற்கான விண்ணப்ப படிவம் மாவட்ட சமூக நல அலுவலகம் மற்றும் பி.டீ.ஓ. அலுவலகங்களில் கிடைக்கும். நிரப்பப்பட்ட விண்ணப்பத்தை இதே அலுவலகங்களில் சமர்ப்பிக்கலாம்.

ஆதாரம் : ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், தமிழ்நாடு அரசு

EVA STALIN IAS ACADEMY

# தெற்காசியாவில் முதலீட்டுக்கு உகந்தது தமிழ்நாடு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விருப்பம்




சென்னையில் செவ்வாய்க்கிழமை முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் மிட்ஸுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வே.விஷ்ணு, மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் குழுமத் தலைவர் யாசுமிச்சி தாகனோகி.

**சென்னை, மே 9:** தெற்காசியாவிலேயே முதலீட்டுக்கு ஏற்ற மாநிலமாக தமிழ்நாடு உருவாக வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் விருப்பம் தெரிவித்தார்.

மிட்ஸுபிஷி நிறுவனத்துடன் தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாறும் நிகழ்ச்சி சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

தொழில் துறை நிகழ்ச்சிகள், அந்தத் துறையின் நிகழ்ச்சிகளாக மட்டும் அமைவதில்லை. மாநில வளர்ச்சியின் நிகழ்ச்சிகளாகவும் அமைந்திருக்கின்றன. இப்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக, மிட்சுபிஷி நிறுவனமானது குளிர்சாதன இயந்திரங்கள் மற்றும் காற்றழுத்தக் கருவிகளை உற்பத்தி செய்யவுள்ளது. இதற்காக திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம் பெருவயல் கிராமத்தில் ரூ.1,891 கோடி முதலீடு செய்யவுள்ளது. இதன்மூலம், 2,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

கடந்த ஆண்டு ஜூலையில், தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை வெளியிடப்பட்டது. அதிலிருந்து 50-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் உள்பட பல புதிய தொழில்நுட்ப மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், 1.22 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் 60 சதவீதத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

பெண்களின் நலன் பேணுவதில் அதிக கவனம் செலுத்தி வரும் அரசின் முயற்சிகளுக்கு இத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வலு சேர்க்கும். பெண்களை அதிகளவில் பணியில் அமர்த்தும் நிறுவனங்களை வரவேற்றுக் கொண்டிருக்கிறோம்.

புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. இந்திய அளவில் மட்டுமல்ல, தெற்காசிய அளவில் முதலீடுகளை ஈர்ப்பதில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்க வேண்டும் என்ற குறிக்கோளை அடைய இரவு பகலாக உழைத்து வருகிறோம்.

அதிலும், குறிப்பாக ஜப்பானிய முதலீட்டாளர்கள் பெரிதும் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. எண்ணற்ற ஜப்பானிய நிறுவனங்கள், தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து தங்களது திட்டங்களை இங்கு நிறுவியுள்ளன.

ஜப்பான் - இந்தியா முதலீடு மேம்பாட்டுக் கூட்டாண்மைத் திட்டத்தின் கீழ், இந்தியாவில் 12 ஜப்பானிய தொழில்நுட்ப நகரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் மூன்று, தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், நமது மாநிலத்தில் அதிகளவில் ஜப்பானியர்கள் வசித்து வருகின்றனர்.

ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம்: இந்திய அளவில், இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்ற உயரிய இலக்கை நிர்ணயித்துள்ளேன். இந்த இலக்கை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

இந்தப் பாதையில் ஒரு மைல்கல்லாக மிட்சுபிஷி நிறுவனத்தின் முதலீடு அமைந்திருப்பதில் மகிழ்ச்சி. இவ்வாறான முதலீடுகள் பொருளாதார இலக்கை அடைவதற்கு உந்துதல் அளிப்பதோடு, நேர்மறை விளைவுகளை ஏற்படுத்தும்.

இந்தச் சூழலில், மிட்சுபிஷி நிறுவனத்தின் திட்டமானது தொடங்கப்படவிருப்பது தமிழ்நாடு அடைந்திருக்கும் பல வெற்றிகளுக்கு சிறப்பு சேர்ப்பது மட்டுமின்றி, தமிழ்நாட்டின் மின்னணு உற்பத்திச் சூழல் அமைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில், தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, துறையின் கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வி.விஷ்ணு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### 'மே 23-இல் வெளிநாடு பயணம்'

மே 23-இல் ஜப்பான், சிங்கப்பூர் நாடுகளுக்குச் செல்ல இருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மிட்சுபிஷி நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

உலக முதலீட்டாளர் மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டுக்கு அழைப்பு விடுப்பதற்காக, வரும் 23-ஆம் தேதி ஜப்பான், சிங்கப்பூர் நாடுகளுக்குச் செல்ல இருக்கிறேன்.

தமிழ்நாட்டுக்கும், ஜப்பானுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், இந்த மாதத்தில் தொழில் முதலீட்டுக் குழுவுக்கு தலைமை தாங்கி, ஜப்பான் செல்ல உள்ளேன். அங்கு முன்னணி தொழில் துறைத் தலைவர்களையும், அரசு அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளேன். உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்று தமிழ்நாட்டில் முதலீடு மேற்கொள்ள வருமாறு அழைப்பு விடுக்க உள்ளேன் என்றார் முதல்வர் ஸ்டாலின்.

# ஆப்பிரிக்கா, தென் அமெரிக்க நாடுகளுக்கு செல்ல மஞ்சள் காய்ச்சல் தடுப்பூசி கட்டாயம்

ஆப்பிரிக்கா, தென் அமெரிக்க நாடுகளில் மஞ்சள் காய்ச்சல் (Yellow Fever) என்ற நோய் பரவி வருகிறது. அதைக் கருத்தில்கொண்டு இந்தியாவிலிருந்து அந்நாடுகளுக்கு செல்வோரும், அந்நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வருவோரும் மஞ்சள் காய்ச்சல் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும்.

மஞ்சள் காய்ச்சல்: இது பாதிக்கப்பட்ட கொசுக்களால் பரவும் கடுமையான வைரஸ் ரத்தக்கசிவு நோயாகும். பெயரில் உள்ள மஞ்சள் சில நோயாளிகளைப் பாதிக்கும் மஞ்சள் காமாலையைக் குறிக்கிறது.

அறிகுறிகள்: காய்ச்சல், தலைவலி, மஞ்சள் காமாலை, தசை வலி, குமட்டல், வாந்தி மற்றும் சோர்வு.

வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் ஒரு சிறிய விகிதம் கடுமையான அறிகுறிகளை உருவாக்குகிறது மற்றும் அவர்களில் பாதி பேர் 7 முதல் 10 நாட்களுக்குள் இறக்கின்றனர்.

எண்டெமிக்: **இந்த வைரஸ் ஆப்பிரிக்கா மற்றும் மத்திய மற்றும் தென் அமெரிக்காவின் வெப்பமண்டல பகுதிகளில் உள்ளது.**

தடுப்பு: மஞ்சள் காய்ச்சல் பாதுகாப்பான மற்றும் மலிவு விலையில் மிகவும் பயனுள்ள தடுப்பூசி மூலம் தடுக்கப்படுகிறது.

மஞ்சள் காய்ச்சல் தொற்றுநோய்களை நீக்குதல் (EYE) 2017-2026: இது 2026 ஆம் ஆண்டளவில் மஞ்சள் காய்ச்சல் தொற்றுநோய்களை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்ட கூட்டாளர்களின் (கவி, யுனிசெஃப் மற்றும் WHO) கூட்டணியால் உருவாக்கப்பட்டது.

S ACADEMY

# இந்தியா – இஸ்ரேல் இடையே முக்கிய உடன்படிக்கை

புது தில்லி, மே 9: இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் இலாய்கோஹன் இடையே புது தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தையில் வர்த்தகம், போக்குவரத்து, பாதுகாப்புத் துறைகளில் உள்ள தொடர்புகளை விரிவுபடுத்தும் விதமாக முக்கிய உடன்படிக்கை எட்டப்பட்டது.

மூன்று நாள் பயணமாக இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் இலாய் கோஹன் புது தில்லி வந்தார். வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோரை அவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதையடுத்து, இரு நாட்டு வர்த்தக உறவுகளை மேம்படுத்தி இரு நாடுகளும் பயன்பெறும் விதமான உடன்படிக்கை எட்டப்பட்டது. இதன்படி, 42,000 கட்டுமானத் தொழில் மற்றும் செவிலியர்கள் இஸ்ரேலில் பணி புரிய அனுமதி அளிக்க இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது.



புது தில்லியில் செவ்வாய்க்கிழமை இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் கோஹனுடன் பேச்சுவார்த்தை நடத்திய எஸ்.ஜெய்சங்கர்.

மேலும் போக்குவரத்து, பாதுகாப்புத் துறைகளிலும் உறவுகளை விரிவுபடுத்த பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

எஸ்.ஜெய்சங்கருடனான பேச்சுவார்த்தைக்குப் பிறகு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை இஸ்ரேல் அமைச்சர் சந்தித்துப் பேசினார்.

பின்னர் மரியாதை நிமித்தமாக பிரதமர் நரேந்திர மோடியை அவர் சந்தித்தார். இதனிடையே இஸ்ரேலில் ஒரு தாக்குதல் நடவடிக்கை குறித்த தகவல் கிடைத்ததையடுத்து, தனது மூன்று நாள் பயணத்தை ஒரே நாளில் முடித்துக் கொண்டு தாயகம் திரும்பினார்.


இந்திய தொழிலக கூட்டமைப்பு சார்பில் அவர் கலந்து கொண்டு அவர் பேசியதாவது:

இந்தியா-இஸ்ரேல் இடையே வர்த்தகத்துக்கான வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளதால் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய இஸ்ரேல் ஆர்வமாக உள்ளது.

கடந்த 1992-ஆம் ஆண்டு சுமார் 200 மில்லியன் டாலராக இருந்த இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக மதிப்பு, கடந்த நிதியாண்டில் 7.86 பில்லியனாக உயர்ந்துள்ளது.

இஸ்ரேல் கல்வி நிலையங்களில் இந்திய மாணவர்கள் சேர்க்கை விவகாரத்தில் உள்ள சிக்கல்கள் குறித்து வல்லுநர் குழு ஆராய்ந்து வருகிறது.

குறிப்பாக இந்தியா உள்பட பல்வேறு வெளிநாட்டு மாணவர்கள், உயர்கல்வி பயில இஸ்ரேலைத் தேர்ந்தெடுப்பதை நாங்கள் வரவேற்கிறோம். இருநாட்டு அறிவியல் சமூகத்தை இது இணைக்கும் என்றார்.



பாதுகாப்பு படையினருக்கான வீரதீர விருதுகள்: குடியரசுத் தலைவர் வழங்கி கௌரவம்

புது தில்லி, மே 9: ராணுவம், துணை ராணுவம் மற்றும் காவல்துறையில் திடமான துணிச்சலை வெளிப்படுத்தி திறம்பட பணியாற்றிய வீரர்களுக்கு அவர்களின் வீரதீரத்தைப் பாராட்டி 'கீர்த்தி சக்ரா' மற்றும் 'சௌர்ய சக்ரா' விருதுகளை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்கி கௌரவித்தார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விழாவில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இதில் உயிரிழந்த 5 வீரர்கள் உள்பட 8 பேருக்கு கீர்த்தி சக்ரா விருதும், உயிரிழந்த 5 வீரர்கள் உள்பட 29 பேருக்கு சௌர்ய சக்ரா விருதும் வழங்கப்பட்டன.

**இந்தியாவில் கேலண்ட்ரி விருதுகள் என்ன?**

சுதந்திரத்திற்குப் பிறகு, பரம் வீர் சக்ரா, மஹா வீர் சக்ரா மற்றும் வீர் சக்ரா ஆகிய முதல் மூன்று கேலண்ட்ரி விருதுகள் இந்திய அரசால் ஜனவரி 26, 1950 அன்று நிறுவப்பட்டன, அவை ஆகஸ்ட் 15, 1947 முதல் நடைமுறைக்கு வரும் என்று கருதப்பட்டது.

அதன்பிறகு, மற்ற மூன்று துணிச்சலான விருதுகள் - அசோக சக்ரா வகுப்பு-I, அசோக சக்ரா வகுப்பு-II மற்றும் அசோக சக்ரா வகுப்பு-III - 1952 இல் நிறுவப்பட்டன, அவை ஆகஸ்ட் 15, 1947 முதல் நடைமுறைக்கு வரும் என்று கருதப்பட்டது.

இந்த விருதுகள் முறையே அசோக சக்ரா, கீர்த்தி சக்ரா மற்றும் சௌர்ய சக்ரா என 1967 ஜனவரியில் மறுபெயரிடப்பட்டது.

இந்த விருதுகளின் முன்னுரிமை வரிசை பரம் வீர் சக்ரா, அசோக சக்ரா, மகாவீர் சக்ரா, கீர்த்தி சக்ரா, வீர் சக்ரா மற்றும் சௌரிய சக்ரா ஆகும்.

**அமைதிக்கால துணிச்சலான விருதுகள் என்றால் என்ன?**

**அசோக சக்கரம்:**

இது அமைதிக் காலத்தில் வீரம், துணிச்சலான செயல் அல்லது தியாகத்திற்கான மிக உயர்ந்த இராணுவ விருது ஆகும்.

இது மிகவும் வெளிப்படையான துணிச்சலுக்காக அல்லது எதிரியின் முகத்தில் அல்லாமல், தைரியமான அல்லது முன்னோடியான வீரம் அல்லது சுய தியாகத்தின் சில செயல்களுக்காக வழங்கப்படுகிறது.

**கீர்த்தி சக்ரா:**

இது இரண்டாவது மிக உயர்ந்த அமைதிக்கால துணிச்சலான விருது மற்றும் போர்க்களத்தில் இருந்து விலகி வீரம், தைரியமான செயல் அல்லது சுய தியாகத்திற்காக வழங்கப்படுகிறது.

**சௌர்ய சக்ரா:**

இது அசாதாரணமான துணிச்சலான நிகழ்வுகளுக்காக ஆயுதப்படைகளின் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

EVA STALIN IAS ACADEMY



# வழக்கு விசாரணை உள்ளூர் மொழியில் நேரலைக்கு முயற்சி

புது தில்லி, மே 9: 'உச்சநீதிமன்ற வழக்கு விசாரணையை அதிக எண்ணிக்கையிலான மக்கள் எளிதில் பின்பற்றும் வகையில் ஆங்கிலத்தில் மட்டுமின்றி பிற மொழிகளிலும் நேரலையில் ஒளிபரப்புவதை உறுதிப்படுத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது' என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் செவ்வாய்க்கிழமை கூறினார்.

ஒரே பாலின திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் அளிக்கக் கோரி தாக்கல் செய்த மனுக்கள் மீதான 8-ஆம் நாள் விசாரணையின்போது இக் கருத்தை தலைமை நீதிபதி தெரிவித்தார். தலைமை நீதிபதி தலைமையிலான அரசியல் சாசன அமர்வு இந்த வழக்கை தொடர்ந்து விசாரித்து வருகிறது.

வழக்கு அண்மையில் விசாரணைக்கு வந்தபோது, 'ஒரே பாலின திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் அளிக்கும் விவகாரத்துக்குள் செல்லாமல், அந்த தம்பதியர் சமூகத்தில் சந்தித்து வரும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கான நிர்வாக ரீதியிலான நடவடிக்கைகள் குறித்து ஆராய மத்திய அமைச்சரவைக் குழு செயலர் தலைமையில் குழு ஒன்று அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

எந்த மாதிரியான நிர்வாக நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்பது குறித்து மனுதாரர்களும் ஆலோசனைகள் மற்றும் கருத்துகளைத் தெரிவிக்கலாம்' என்றார்.

இந்த வழக்கு செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய பிரதேச அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் ராகேஷ் துவிவேதி, 'இந்த வழக்கு விசாரணை சமூகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. வழக்கு விசாரணை நேரலை செய்யப்படுவதால், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களும் இந்த விவகாரம் குறித்து சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றனர்' என்றார்.

இதைக் கேட்ட தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், 'வழக்கு விசாரணையை பொதுமக்களின் வீட்டுக்கே கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே நேரலை ஒளிபரப்பை உச்ச நீதிமன்றம் நடைமுறைப்படுத்தியுள்ளது. இதுவும் வழக்கு விசாரணையின் ஒரு பகுதிதான்' என்றார்.

அப்போது குறுக்கிட்ட வழக்குரைஞர் ராகேஷ் துவிவேதி, 'வழக்கு விசாரணை ஆங்கில மொழியில் நடைபெறுவதுதான் ஒரே தடையாக உள்ளது. கிராமங்களில் வசிக்கும் மக்கள் புரிந்துகொள்ள முடியாது' என்றார்.

இதற்கு பதிலளித்த தலைமை நீதிபதி, 'உச்சநீதிமன்ற வழக்கு விசாரணையை அதிக எண்ணிக்கையிலான மக்கள் எளிதில் பின்பற்றும் வகையில் ஆங்கிலத்தில் மட்டுமின்றி மற்ற மொழிகளிலும் நேரலையில் ஒளிபரப்புவதை உறுதிப்படுத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது' என்றார்.

அப்போது இந்த வழக்கில் 'ஜாமியாத்-உலமா-இ-ஹிந்த்' அமைப்பு சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் கபில் சிபல், 'தற்போது ஆங்கிலத்தில் பேசுவதை ஜப்பானிய மொழி உள்பட பல்வேறு மொழிகளில் கேட்கக் கூடிய தொழில்நுட்பம் உள்ளது' என்றார்.

இந்த வாதங்களுக்குப் பிறகு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.



**தலைமை நீதிபதி**

நீதிபதி சந்திரசூட் 50 வது தலைமை நீதிபதி ஆவார் மற்றும் இந்தியாவின் 49 வது தலைமை நீதிபதியாக குறுகிய காலம் பணியாற்றிய நீதிபதி யு.யு.லலித்திடம் இருந்து பதவியை ஏற்றுள்ளார்.

**ARTICLE 141:**

உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தை உருவாக்கும் அதிகாரம் அரசியலமைப்பின் 141 வது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட சட்டம் நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது.

EVA STALIN



லெளரியஸ விருதுகள் - 2022

# சிறந்த வீரர் மெஸ்ஸி; சிறந்த வீராங்கனை ஃப்ரேசர்

Laureus

பாரீஸ், மே 9: லெளரியஸ் அமைப்பின் 2022-ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர் விருதை ஆர்ஜென்டீன கால்பந்து நட்சத்திரம் லயோனல் மெஸ்ஸியும், சிறந்த வீராங்கனை விருதை ஜமைக்க ஓட்டப் பந்தய நாயகி ஷெல்லி ஆன் ஃப்ரேசர் பிரைஸும் பெற்றனர்.

கரோனா சூழல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த இந்த லெளரியஸ் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி, 2020-க்குப் பிறகு முதல் முறையாக பாரீஸ் நகரில் திங்கள்கிழமை நள்ளிரவு (இந்திய நேரப்படி) நடைபெற்றது. இதில் 8 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டன. லெளரியஸ் விருதுக்கான போட்டியாளர்கள் பெயர்களை சர்வதேச ஊடகங்கள் பரிந்துரைக்கின்றன. லெளரியஸ் உலக விளையாட்டு அகாதெமியை சேர்ந்த 71 உறுப்பினர்கள் வாக்களிப்பதன் அடிப்படையில் அதிலிருந்து வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

### லயோனல் மெஸ்ஸி

சிறந்த வீரருக்கான விருதை 2-ஆவது முறையாக வென்றார் மெஸ்ஸி. இதற்கு முன் 2020-இல் எஃப்1 கார் பந்தய வீரர் லீவிஸ் ஹாமில்டனுடன் இணைந்து அவர் வென்றிருந்தார். தற்போது, ஆர்ஜென்டீன அணியை உலகக் கோப்பை சாம்பியன் அரியாசனத்தில் அமர வைத்ததற்காக மெஸ்ஸிக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

### கார்லோஸ் அல்கராஸ்

அசாத்திய முன்னேற்றத்தை சந்தித்ததற்கான விருது, ஸ்பெயினைச் சேர்ந்த இளம் டென்னிஸ் வீரரான கார்லோஸ் அல்கராஸுக்கு வழங்கப்பட்டது. 2022-இல் யு.எஸ். ஓபன் சாம்பியன் பட்டம் வென்ற அவர், உலகின் நம்பர் 1 வீரராகவும் உருவெடுத்ததன் அடிப்படையில் இந்த விருதுக்கு தகுதிபெற்றார். சமீபத்தில் இரு மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டிகளில் அடுத்தடுத்து தனது சாம்பியன் பட்டத்தை தக்கவைத்திருக்கும் அவர், மீண்டும் உலகின் நம்பர் 1 வீரர் இடத்துக்கு வரவுள்ளார்.

### ஈலீன் கூ

அதிரடி விளையாட்டு போட்டியாளர் விருது, அமெரிக்காவில் பிறந்த சீன ஃப்ரீஸ்டைல் பனிச்சறுக்கு வீராங்கனை ஈலீன் கூவுக்கு கிடைத்துள்ளது. 2022 பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் 3 பிரிவுகளிலாக 2 தங்கம், 1 வெள்ளிப் பதக்கம் வென்றார். ஒரே ஒலிம்பிக்கில் ஃப்ரீஸ்டைல் பனிச்சறுக்கில் 3 பதக்கங்கள் வென்ற முதல் வீராங்கனை என்ற பெருமைக்குரியவர்.

### இதர விருதுகள்

குழந்தை அகதிகளுக்கான விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்தும் 'டீம் அப்' திட்டத்துக்கு நல்லெண்ணத்திற்கான விருதும், சக்கர நாற்காலி தடகளத்தில் உலக சாதனைகள் படைத்துள்ள கலிட்டசர்வாந்து வீராங்கனை கேத்தரின் டிபுருனருக்கு சிறந்த மாற்றுத்திறனாளிக்கான விருதும் வழங்கப்பட்டன.

### கிறிஸ்டியன் எரிக்சன்

சிறந்த மீண்டு வந்த போட்டியாளருக்கான விருது, டென்மார்க் கால்பந்து வீரரான கிறிஸ்டியன் எரிக்சனுக்கு கிடைத்துள்ளது. 2020 யூரோ கோப்பை கால்பந்து போட்டியின்போது களத்தில் மாரடைப்பு ஏற்பட்டு சரிந்த எரிக்சன், பின்னர் அதிலிருந்து மீண்டு முழுமையாக உடற்தகுதிபெற்று இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்து போட்டிக்குத் திரும்பியதை மெச்சும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டது.

### ஆர்ஜென்டீன அணி

சிறந்த அணியாக, உலகக் கோப்பை கால்பந்தில் சாம்பியனான ஆர்ஜென்டீன அணி தேர்வாக, அதற்கான விருதும் அந்த அணியின் கேப்டனான மெஸ்ஸிக்கு கிடைத்தது. இவ்வாறு ஒரே ஆண்டில், சிறந்த வீரருக்கான விருது, சிறந்த அணிக்கான விருது என இரண்டையும் பெற்ற முதல் வீரர் என்ற பெருமையை மெஸ்ஸி பெற்றிருக்கிறார். அணியின் தரப்பிலாக டிஃபெண்டர் நிகோலஸ் ஓடமெண்டி... விளையாட்ரோ மார்டினெஸ், ஆர்ஜென்டீன கால்பந்து சங்க தலைவர் கிளாடியோ டாபியா ஆகியோர் விருதை பெற்றுக் கொண்டனர்.

### ஷெல்லி ஆன் ஃப்ரேசர் பிரைஸ்

இதற்கு முன் சிறந்த வீராங்கனை விருதுக்காக ஃப்ரேசர் பிரைஸ் 5 முறை பரிந்துரைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது தான் அவருக்கு அந்த விருது சாத்தியமாகியிருக்கிறது. கடந்த ஆண்டு அவர் உலக தடகள சாம்பியன்ஷிப்பில் 100 மீட்டர் ஓட்டத்தில் 5-ஆவது முறையாக தங்கப் பதக்கம் வென்றார். மொத்தமாக அவர் 3 ஒலிம்பிக் தங்கமும், 10 உலக சாம்பியன்ஷிப் தங்கமும் தன் வசம் வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## About

The Laureus World Sports Awards is an annual award ceremony honouring individuals and teams from the world of sports along with sporting achievements throughout the year. It was established in 1999 by Laureus Sport for Good Foundation founding patrons Daimler and Richemont.
Wikipedia

**Ceremony date:** 8 May 2023

**Most awards:** Roger Federer (5)

**Presented by:** Laureus Sport for Good Foundation

EVA STALIN IAS ACADEMY